# முத்தமிழறிஞர் கலைஞர் 102 வது பிறந்த நாள்: திருவுருவச்சிலை - திருவுருவப்படத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை!



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102ஆவது பிறந்த நாளையொட்டி நேற்று (3.6.2025) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, அண்ணா அறிவாலயம் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், கழக பொருளாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் – நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, கழக துணை பொதுச் செயலாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், வாரியத் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102ஆவது பிறந்த நாளையொட்டி நேற்று (3.6.2025) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, முரசொலி வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வாரியத் தலைவர்கள் உடனிருந்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102ஆவது பிறந்த நாளையொட்டி நேற்று (3.6.2025) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கோபாலபுரம் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102ஆவது பிறந்த நாளையொட்டி நேற்று (3.6.2025) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சி.ஐ.டி நகர் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் துணைவியார் திருமதி ராஜாத்தி அம்மாள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### செய்தி மக்கள் தொடர்புத் துறை தமிழரசின் சார்பில் தயாரிக்கப்பட்ட

## "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு" சாதனை மலர்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, ஜீன் 4 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (03.06.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற செம்மொழி நாள் விழாவில் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத்துறையின் 'தமிழரசு' சார்பில் "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு" என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட நான்காண்டு சாதனை மலரினை வெளியிட்டார்.**

முதலமைச்சராக 2021 ஆம் ஆண்டு மே மாதம் பொறுப்பேற்ற நாள் முதல் மாநிலத்தின் கடைக்கோடி மக்களும் பயன்பெறத்தக்க வகையில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், மகளிர் விடியல் பயணம் திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மக்களைத்தேடி மருத்துவம் திட்டம், மக்களுடன் முதல்வர் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், இல்லம் தேடிக்கல்வி திட்டம், ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், முதல்வர் மருந்தகம் திட்டம் போன்ற எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களினால் தமிழகம் முன்னேற்றப்பாதையில் வளர்ச்சியடைந்துள்ளது.

அவ்வகையில், முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு நான்காண்டு நிறைவடைந்ததையொட்டி, கடந்த நான்காண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களைத் துறை வாரியாகத் தொகுத்து, தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கீழ் இயங்கும் 'தமிழரசு' சார்பில் நான்காண்டு சாதனை மலர் ஒன்றினை தயாரித்துள்ளது.

இச்சாதனை மலரில் பல்வேறு முக்கிய பிரமுகர்களின் கட்டுரைகளான, ஊடகவியலாளர் ப.திருமாவேலன் அவர்கள் எழுதிய "தமிழ் எங்கள் உயிருக்கு நேர்", தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இணை இயக்குநர் ரெ.கோமகன் அவர்கள் எழுதிய "மகளிர் வாழ்வில் மகிழ்ச்சி", தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் உதவி இயக்குநர் செல்வ புவியரசன் அவர்கள் எழுதிய "அறம் காக்கும் ஆட்சி", தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் உள்ளடக்க மேலாண்மை வல்லுநர் ந.செல்லப்பா அவர்கள் எழுதிய "ஓர் ஏர் உழவர் காக்கும் அரசு", தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் உள்ளடக்க மேலாண்மை வல்லுநர் த.ராஜன் அவர்கள் எழுதிய "கல்வியிற் சிறந்த தமிழ்நாடு" என்ற கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

மூத்த பத்திரிகையாளர், ந.ராமேஷ் அவர்கள் எழுதிய "தொழில் பெருகும் தமிழ்நாடு", மதுரை காமராசர் பல்கலைக் கழகம், பொருள் அளவீட்டியல் துறை, முனைவர் செள.புஷ்பராஜ் அவர்கள் மற்றும் தி.சு.கி.துர்கேஷ் நந்தினி அவர்கள் ஆகியோர்கள் எழுதிய "இந்தியாவின் விடியல் பயணத்தால் வழிகாட்டும் தமிழக ஊரக மேம்பாட்டுத் திட்டங்கள்", முத்தமிழறிஞர் கலைஞர் ஆய்வு மைய இயக்குநர் பேராசிரியர் இரா.சுப்பிரமணி அவர்கள் எழுதிய "தமிழ்நாடு; உயர்கல்வியில் முதலிடம் அறிவுப் புலத்தின் புகழிடம்" என்ற கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

மேலும், எழுத்தாளர் மற்றும் ஆய்வாளர் சூரியா கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எழுதிய "இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு", வாவ் மீடியா வோர்ல்ட், துணை ஆசிரியர் பி.எம். சுதீர், அவர்கள் எழுதிய "விளையாட்டல்ல நிஜம் கனவுகள் நனவாகின்றன!", மருத்துவர் ப.மீ.யாழினி அவர்கள் எழுதிய "எல்லார்க்கும் எல்லாம்: தமிழ்நாட்டின் சுகாதாரப் பெருவழி" ஆகிய கட்டுரைகளும் மற்றும் தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகளின் சாதனைகள், மக்கள் நலத்திட்டங்கள், திட்டங்களின் பயன்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

இந்த நான்காண்டு சாதனை மலரினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (03.06.2025) நடைபெற்ற செம்மொழி நாள் விழாவில் வெளியிட, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல் திருமாவளவன், வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் செயலாளர் இரா.முத்தரசன், இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் வே.ராஜாராமன், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் அவ்வை அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாவட்டம் ஒத்தக்கடை அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவியர்களுக்கு பள்ளிக்கல்வித்துறை சார்பில் பாடநூல் புத்தகங்களை வழங்கி கடந்தமுறை பள்ளி விழாவிற்கு வருகை தந்தபோது அதிக அளவில் தேர்ச்சி பெற்றால் ரூ 50 லட்சம் பள்ளி வளர்ச்சிக்கு வழங்குவதாக அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் 99 சதவீதம் தேர்ச்சி பெற்ற ஒத்தக்கடை மேல்நிலைப்பள்ளியின் வளர்ச்சி பணிக்கு கிழக்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி கடிதம் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.செள.சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் த ரேணுகா கழக நிர்வாகிகள் சோமசுந்தர பாண்டியன், அ.பா ரகுபதி, வழக்கறிஞர் கலாநிதி, வாசுகி சசிகுமார், மணிமேகலை, பாலாண்டி, சரவணன், மருதுபாண்டி ஆகியோர் உள்ளனர்.